*2019 ஜுலை 18][திரு. எடப்பாடி கே. பழனிசாமி]*

*அனைத்து வசதிகளுடன்கூடிய 5 சமுதாயக் கூடங்கள், தலா 1 கோடி ரூபாய் வீதம், 5 கோடி ரூபாய் மதிப்பில் கட்டப்படும் என்பதைத் தெரிவித்துக்கொண்டு அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

## 4. விதி 110-ன்கீழ் முதலமைச்சரின் அறிவிப்புகளுக்கு நன்றி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் புதுக்கோட்டை நகராட்சி மற்றும் விருதுநகர் நகராட்சி நூற்றாண்டு விழா, எடப்பாடி நகராட்சி மற்றும் பட்டுக்கோட்டை நகராட்சி பொன் விழா ஆகியவற்றை முன்னிட்டு சிறப்பு நிதி ஒதுக்கி அடிப்படைத் தேவைகளை மேம்படுத்தினார்கள். மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில் சிறப்பாகச் செயல்படும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள், அம்மா அவர்கள் அறிவித்த திட்டங்களை மட்டுமல்ல, மக்களுக்குத் தேவையான திட்டங்களை அறிவித்து, இன்று மக்களின் சிறந்த முதல்வராகத் திகழ்ந்து வருகிறார்கள்.*

*விழுப்புரம் நகராட்சியில் நடக்கவிருக்கும் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு, நகராட்சியின் அடிப்படைத் தேவைகளை மேம்படுத்திட சிறப்பு நிதியாக 50 கோடி ரூபாய் நிதி ஒதுக்கி அறிவிப்பு வெளியிட்டதற்கு எனது மனமார்ந்த நன்றியை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விழுப்புரம் நகராட்சியில் 1-10-2019 அன்று நடக்கவிருக்கும் நூற்றாண்டு விழாவினை முன்னிட்டு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், விழுப்புரம் நகராட்சிக்குத் தேவையான கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக 50*

கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு விழுப்புரம் நகராட்சி மக்களின் சார்பாகவும், என் சார்பாகவும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. இரா. துரைக்கண்ணு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூரில் சர்வதேச மலர் ஏல மையம் அமைக்க வேண்டுமென்று கிருஷ்ணகிரி, தருமபுரி, சேலம், ஈரோடு ஆகிய மாவட்ட விவசாயிகள், விற்பனையாளர்கள், மலர் ஏற்றுமதியாளர்கள் ஆகியோர்களிடமிருந்து பெறப்பட்ட கோரிக்கைகளை ஏற்று, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஓசூரில் 20 கோடியே, 20 இலட்சம் ரூபாய் செலவில் சர்வதேச மலர் ஏல மையம் ஒன்றை அமைப்பதற்கு விதி 110–ன்கீழ் அறிவிப்பு செய்த விவசாயிகளின் காவலன், தொடர்ந்து விவசாயிகளின் நலனைக் கருத்தில்கொண்டு சிறப்புமிகு திட்டங்களை அறிவித்து வரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் அவர்களுக்கு விவசாய பெருமக்கள் சார்பில் கோடானுகோடி நன்றிகளை காணிக்கையாக்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரலாற்று சிறப்புமிக்க இந்தப் பேரவையிலே விதி 110–ன்கீழ் தமிழக மக்களுக்கு பல்வேறு திட்டங்களை வழங்கி வருகிற அந்த வெற்றி வரலாற்றிலே இன்றைக்கு வருவாய்த் துறையில் ஒரு மைல் கல்லாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் புதிய மாவட்டங்கள், சிறப்பு குறைதீர்க்கும் முகாம்கள், புதிய கட்டடங்கள், நிவாரணத் திட்டங்கள் என்று, முத்து முத்தான திட்டங்களை வருவாய்த் துறைக்கு அளித்துள்ள தாய் தமிழ்நாட்டின் சொத்தாக விளங்குகிற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களுக்கு (மேசையைத் தட்டும் ஒலி) கோடானுகோடி நன்றிகளை வருவாய்த் துறையின் சார்பாக தெரிவித்துக்கொள்கிறேன்.

2019 ஜூலை 18] [திரு. ஆர்.பி. உதயகுமார்]

நண்பகல் 12–00

தென்காசியைத் தலைமையிடமாகக் கொண்டு தனி மாவட்டம் உருவாக்கப்பட வேண்டுமென்று, தென்காசி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. எஸ். செல்வமோகன்தாஸ் பாண்டியன் அவர்கள் இந்த அவையில் தொடர்ந்து குரல் கொடுத்துக் கொண்டேயிருந்தார். எப்போதுமே மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசிடம் கோரிக்கை வைத்தால், கோரிக்கை வைத்தவர்கள் வெற்றி பெறுவார்கள் என்பதற்கு இந்த அறிவிப்பு ஒரு சான்று. மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். செல்வமோகன்தாஸ் பாண்டியன் அவர்களுக்கு இது ஒரு வரப்பிரசாதமாக இருக்கும். மேலும், அந்த மாவட்டத்தைச் சேர்ந்த அமைச்சர்கள் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் உள்ளிட்ட அனைவருக்கும் இது ஒரு வரப்பிரசாதமாக இருக்கும். இன்னும், பல்வேறு கோரிக்கைகள் இருக்கின்றன. கும்பகோணத்தைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய மாவட்டம் உருவாக்கிட வேண்டுமென்று நான், நீங்கள் உள்ளிட்ட பல்வேறு உறுப்பினர்கள் முன்வைத்த பல்வேறு கோரிக்கைகள் நிலுவையில் இருக்கின்றன. ஏனென்றால், 32 வருவாய் மாவட்டங்கள் என்றிருந்த நிலையில், கள்ளக்குறிச்சியைத் தலைமையிடமாகக் கொண்டு முதல் அறிவிப்பு. அதைத் தொடர்ந்து தென்காசி தனி மாவட்டமாக உருவாகியிருக்கிறது. காஞ்சிபுரத்தைப் பிரித்து செங்கல்பட்டு தனி மாவட்டமாக உருவாகியிருக்கிறது. நிச்சயமாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் கும்பகோணமும் மாவட்டமாக உருவாவதற்கு அறிவிப்புகள் வரலாம் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். அந்த வகையில், புரட்சித் தலைவர் வழியில், சாமானிய முதலமைச்சராக சரித்திரத்தில் இடம் பிடித்திருக்கிறார் நம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை இந்த நேரத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்து, வணங்கி, அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி வி.எம். ராஜலெட்சுமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாயைப் போல பிள்ளை, நூலைப் போல சேலை என்கிற வாசகத்திற்கு, வாழ்வாய் திகழ்ந்து கொண்டிருப்பவர் எங்களின் சீர்மிகு, சிறப்புமிகு, கண்ணியமிகு, கடமைமிகு,

[திருமதி வி.எம். ராஜலெட்சுமி] [2019 ஜூலை 18

வணக்கத்திற்கும், மரியாதைக்குமுரிய மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் இ.பி.எஸ். அவர்கள், மாண்புமிகு அம்மா அவர்களின் அறவழியில் நின்று காலத்தை வென்று, காவியம் படைக்கின்ற வகையில் முத்தான மூன்று அறிவிப்புகளை விதி 110–ன்கீழ் ஆதி திராவிடர் நலத் துறைக்கு வழங்கியுள்ளார்கள்.

அவ்வகையில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தவும், பழங்குடியினரின் உண்டி–உறைவிடப் பள்ளிகளின் நிலைகளை உயர்த்திடவும், அனைத்து வசதிகளுடன்கூடிய ஐந்து புதிய சமுதாயக் கூடங்களை சிறப்பாகக் கட்டுவதற்கு 5 கோடி ரூபாய் நிதி ஒதுக்கியும் வரலாற்றுச் சிறப்புமிக்க அறிவிப்புகளை வெளியிட்டு, ஆதி திராவிடர்கள் மற்றும் பழங்குடியினர்களின் இதயத்தில் இன்பத்தை விதைத்துள்ள மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு என் சார்பாகவும், துறை சார்பாகவும், ஒட்டுமொத்த ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்களின் சார்பாகவும் நெஞ்சம் நிறைந்த நன்றிகளைப் பணிந்து, பதிவு செய்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மேலும், திருநெல்வேலி மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து தென்காசியைத் தலைமையிடமாகக் கொண்டு தனி மாவட்டம் உருவாக்கப்படும் என்று அறிவித்த மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் அவர்களுக்கு எங்களுடைய மாவட்ட மக்களின் சார்பாகவும், சட்டமன்ற உறுப்பினர்களின் சார்பாகவும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பா. பென்ஜமின்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காஞ்சிபுரம் மாவட்டம் 11 சட்டமன்றத் தொகுதிகளை உள்ளடக்கியது. விதி 110–ன்கீழ், ஒரு வரலாற்றுச் சிறப்புமிக்க புதிய அறிவிப்பாக, நிருவாக ரீதியாக காஞ்சிபுரம் மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து, செங்கல்பட்டைத் தலைமையிடமாகக் கொண்டு புதிய மாவட்டம் உருவாக்கப்படும் என்று தாயுள்ளத்தோடு இன்று அறிவித்திருக்கிற மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு காஞ்சிபுரம் மாவட்ட மக்களின் சார்பிலும், என் சார்பிலும் மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். செல்வமோகன்தாஸ் பாண்டியன் அவர்கள்.*

**திரு. எஸ். செல்வமோகன்தாஸ் பாண்டியன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான், 2016 ஆம் ஆண்டு சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, இந்த அவையில் கவர்னர் உரைமீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போது, என்னுடைய முதல் கோரிக்கையாக தென்காசியை. . . (குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் கோரிக்கையெல்லாம் வேண்டாம். மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி சொல்லுங்கள்.*

**திரு. எஸ். செல்வமோகன்தாஸ் பாண்டியன்:** *தென்காசி தலைமையிடம் என்பதற்கு பெரிய வரலாறு ஒன்றே இருக்கிறது. ஒரே ஒரு விஷயத்தை மட்டும் நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். அந்தக் காலத்தில் பராக்கிரம பாண்டியன் அவர்கள் தென்காசியைத் தலைமையிடமாகக் கொண்டு ஆட்சி செய்யும்போது, சிவபெருமான் அவர்களுடைய கனவில் விஷயம் ஒன்றைச் சொன்னார்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர், எனக்கு நேரமில்லை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி சொல்லுங்கள். நீங்கள் கதை சொல்லிக்கொண்டிருந்தால் எப்படி? நன்றி சொல்லுங்கள்.*

**திரு. எஸ். செல்வமோகன்தாஸ் பாண்டியன்:** *வரலாற்று சிறப்புமிக்க தென்காசிக்கு பெருமை சேர்க்கும்விதமாக, மாண்புமிகு அம்மா அவர்கள் உங்களுடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்று தெரிவித்தபோது நான் அவ்வளவு மகிழ்ச்சி அடைந்தேன். தாய் எட்டடி பாய்ந்தால், குட்டி பதினாறடி பாயும் என்கிற விதமாக பதினாறு அடி பாய்ந்து இந்த எளியவன் வைத்த கோரிக்கையை இன்று நிறைவேற்றித் தந்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு எங்களுடைய தென்காசி மாவட்ட மக்களின் சார்பாகவும், (மேசையைத் தட்டும் ஒலி) குறிப்பாக தென்காசி தொகுதி மக்களின் சார்பாகவும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இப்போது நான் அடையும் இந்த மகிழ்ச்சியின் காரணமாக*

ஏற்படும் ஆனந்தக் கண்ணீரை மாண்புமிகு அம்மா அவர்களுடைய பாதத்தில், அபிஷேகம் செய்து விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர் அவர்கள்.*

*பிற்பகல் 12–05*

***திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலி மாவட்டம், மேற்கு பகுதியைச் சார்ந்த மக்களுடைய நீண்டநாள் கோரிக்கையை ஏற்று—நானும் இந்த அவையில் பல முறை வலியுறுத்தியிருக்கிறேன். நேற்றுகூட சொன்னேன். அந்தக் கோரிக்கையை ஏற்று, இதயத்திற்கு இதமாக குளிர்ச்சி தரக்கூடிய குற்றால சீசனுடைய பரிசாக, பொதிகைத் தென்றலாக, "தென்காசி தனி மாவட்டம்" என்று அறிவிப்பு செய்திருக்கக்கூடிய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கும், தமிழக அரசுக்கும், கடையநல்லூர் தொகுதி மக்களின் சார்பாக இதயம் நிறைந்த நன்றியினையும், பாராட்டுதல்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *திருமதி எஸ். விஜயதரணி, என்ன சொல்லுங்கள்?*

**திருமதி எஸ். விஜயதரணி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களது கன்னியாகுமரி மாவட்டத்தில் விளவங்கோடு தாலுகா பெரிய தாலுகாவாக உள்ளது. அதனைப் பிரித்து. . .*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *நீங்கள் நன்றி மட்டும் சொல்லுங்கள். (குறுக்கீடு) கோரிக்கைக்கு இடம் இல்லை. நன்றி மட்டும் சொல்லுங்கள்.*

**திருமதி எஸ். விஜயதரணி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோரிக்கை இல்லை. இதனை ஏற்கெனவே பிரிக்கச் சொல்லி கோரிக்கை வைத்திருந்தேன். அந்தக் கோரிக்கையினை ஏற்று கிள்ளியூர் தாலுகாவினையும், திருவட்டாறு தாலுகாவினையும் உருவாக்கியது மட்டுமல்ல, அதற்கு கட்டடம் மற்றும் குடியிருப்பு வசதிகள் செய்து தந்து முதல்வர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். விளவங்கோடு தாலுகா அலுவலகம் தற்போது பழைய கட்டடத்தில் உள்ளதால், அதனையும் இதனுடன் சேர்த்து, அந்தக் கட்டடங்களைப் புதுப்பித்து கோர்ட் வளாகத்திலேயே கொடுக்க*

வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இவற்றைப் பிரித்ததோடு மட்டுமல்லாமல், கட்டடங்களையும் வழங்கியுள்ளீர்கள், அதற்காக நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## 5. கவன ஈர்ப்பு

### (அ) மின்சாரம் தாக்கி, பாம்பு கடித்து, நீரில் மூழ்கி மற்றும் சாலை விபத்துகளில் உயிரிழந்தோரின் குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்குதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *சாலை விபத்தில் இறந்தவர்களுக்கு சிறப்பு நிவாரணம் கோரி மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. எஸ். ஈஸ்வரன், திரு. எஸ். ஆஸ்டின், திரு. துரை. சந்திரசேகரன் ஆகியோரும், வீட்டு சுவர் இடிந்து விழுந்ததால் அகால மரணம் அடைந்தவர்களுக்கு நிவாரணம் கோரி திரு. துரை. சந்திரசேகரன் அவர்களும், கடல் அலையில் சிக்கி அகால மரணமடைந்தவர்களுக்கு நிவாரணம் கோரி திரு. த. மனோ தங்கராஜ் அவர்களும், மின்சாரம் தாக்கி இறந்தவர்கள் குடும்பத்திற்கு நிவாரணம் கோரி திரு. கே.எஸ். மூர்த்தி அவர்களும் 55–வது விதியின்கீழ் அறிவிப்புக் கொடுத்துள்ளார்கள். இவர்கள் அவையினுடைய கவனத்தினை ஈர்த்ததாகக் கருதப்படுகிறது. மேலும், மாண்புமிகு அமைச்சர்களும், உறுப்பினர்களும் தங்கள் தொகுதிகளில் இதுபோன்ற அகால மரணமடைந்தவர்களின் குடும்பத்திற்கு இழப்பீடு கோரி மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் கோரிக்கை வைத்திருக்கிறார்கள். ஒட்டுமொத்தமாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்குவது குறித்து அறிவிப்பு வெளியிட அனுமதி கோரியுள்ளார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின்சாரம் தாக்கி, பாம்பு கடித்து, நீரில் மூழ்கி மற்றும் சாலை விபத்துகளில் உயிர் இழந்தோர் குடும்பங்களின் சூழ்நிலையைக் கருத்தில்கொண்டு அவர்களுக்கு நிவாரணம் வேண்டி மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. கே.எஸ். மூர்த்தி, திரு. த. மனோ தங்கராஜ், திரு. எஸ். ஆஸ்டின், திரு. துரை. சந்திரசேகரன், திரு. எஸ். ஈஸ்வரன் ஆகியோரிடமிருந்து கவன ஈர்ப்பு அறிவிப்புகள் வரப்பெற்றுள்ளன. மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர்,*